# 12. குறிஞ்சிக்கலியில் இயற்கைப் புனைவு

முனைவர் அ.கல்பனாதேவி
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
வாவு வஜீஹா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காயல்பட்டணம்.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்களுள் பாவகையால் பெயர் பெற்ற நூல் கலித்தொகை. குறிஞ்சி நில மக்களின் கருப்பொருள்களில் ஒன்றான வேங்கை மரம் இலக்கியங்களில் தலைவன் தலைவி வாழ்க்கை நிகழ்வுகளில் உவமையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மலைநாடனை விளித்துக் கூறுமிடத்து வேங்கை மரத்தை புலிக்கு உவமையாக ஒப்பிட்டுப் புலவர்கள் கூறியுள்ளனர். அக இலக்கியங்களில் தலைவனைப் புகழ்ந்து கூறுமிடத்து அவன் வாழும் நாட்டின் மலைவளம் சிறப்பிக்கப்படுகிறது. மலைப்பகுதிகளில் விழும் அருவியின் அழகும் மலை நாட்டிற்கு உரிய தலைவனைப் புகழுமிடத்தும் அருவியின் சிறப்பும் போற்றப்படுகிறது. தலைவன் தலைவியின் அழகைப் புகழ்ந்து கூறுமிடத்து இயற்கையோடு ஒப்பிட்டுப் புகழ்கிறான். இத்தகைய இயற்கை புனைவு சார்ந்த கருத்துகளே இவ்வாய்வுக் கட்டுரையில் அமைந்துள்ளது.

**முன்னுரை**

தமிழிலக்கிய மரபில் தனிச்சிறப்புடன் திகழ்வது சங்க இலக்கியமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் சமூகப் பின்னணியையும் வாழ்க்கை நெறியையும் சங்க இலக்கியங்கள் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது. சங்ககால மக்களின் வாழ்வியலில் மாந்தர்களின் பங்களிப்பு மட்டுமின்றி இயற்கையும் முக்கிய இடம் பெறுகிறது. மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் என பல இலக்கியங்கள் எடுத்தியம்புகிறது. அவ்வகையில் கலித்தொகையில் இடம் பெறும் குறிஞ்சிக்கலியில் இயற்கைப் புனைவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலித்தொகை**

சங்க இலக்கியங்களுள் பாவகையால் பெயர் பெற்ற நூல்கள் இரண்டு. அவற்றில் ஒன்று கலித்தொகை. இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 150 கலிப்பாக்களைக் கொண்டுள்ளது. திணைக்கு ஒருவராக ஐந்து புலவர்கள் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். 11 அடி முதல் 80 வரையிலான அடிகளை உடைய பாக்கள் உள்ளன. இந்நூல் காதலரின் இன்ப துன்ப உணர்ச்சிகளை இயற்கைச் சூழலுடன் எடுத்துக் கூறுகிறது.

கலித்தொகை பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி, மருதக்கலி என ஐந்து திணைப் பிரிவுகளை உடையதாக அமைந்துள்ளது. குறிஞ்சிக்கலியின் காணலாகும் இயற்கைப் புனைவுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**இயற்கைப் புனைவு**

மனித வாழ்வியலில் இயற்கையைப் பிரிக்க முடியாத ஒன்று. இலக்கியங்கள் வாழ்க்கை நெறிகளை எடுத்தியம்புமிடத்து இயற்கை நிகழ்வுகளை இணைத்துக் கூறுகின்றன. சங்ககால வாழ்வியல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளாகப் பகுத்து நிலம். பொழுது, கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் என திணைக்கென தனித்தனியாகப் பகுத்து வாழ்க்கை நடத்தினர். மலை, கடல், நாடு, நகர், பருவம், அருவி, சந்திரன், வயல் வெளிகள் என அனைத்து இயற்கைப் பொருள்களையும் புலவர்கள் பாடியுள்ளனர்.

**வேங்கை மரம்**

குறிஞ்சி நில மக்களின் கருப்பொருள்களில் ஒன்றான வேங்கை மரம் இலக்கியங்களில்; தலைவன் தலைவி வாழ்க்கை நிகழ்வுகளில் உவமையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிக்கலியில் இடம் பெற்றுள்ள தோழிக்கூற்றுப் பாடல் ஒன்றில் மலை நாடனை விளித்துக் கூறுமிடத்து வேங்கை மரத்தை புலிக்கு உவமையாக ஒப்பிட்டுப் புலவர்கள் கூறியுள்ளனர்.

"உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு அதன் முதல் குத்திய மதயானை

நீடு இருவிடர் அகம் சிலம்பக் கூய், தன்
கோடு புய்க்கல்லாது: உழக்கும் நாட!" (38. 6-9)

எனும் வரிகளில் புலியினது வடிவத்தை ஒத்த வேங்கை மலர்கள் மலர்ந்த மரத்தைப் புலி என்று நினைத்து மதயானை வேங்கை மரத்தின் அடிப்பகுதியில் குத்தி வருத்தம் அடையும் என்று கூறப்பட்டுள்ளது.

'புலிப்பொறி வேங்கைப் பொன் இணர் கொய்து' (ஐங்குறுநூறு. 396)

எனும் ஐங்குறுநூற்றுப் பாடலும் இதே கருத்தை உணர்த்துவதாக அமைகிறது.

மலைப் பகுதிகளிலும் தினைப்புனத்திலும் வேங்கை மரங்கள் பூத்துக் குலுங்கும். அந்த மரங்களில்; உள்ள மலர்களை வண்டுகள் மொய்க்கும்.

மழை பொழிகின்ற இரவுப் பொழுதில் ஆண் யானை பெண் யானையுடன் சேர்ந்து புன்செய் நிலங்களில் புகுந்து பயிரை உண்ண முற்படும் போது, கானவன் கவணில் கல் வைத்து எறிகிறான். அக்கல்லானது மலையிடத்தில் நின்ற வேங்கை மரத்தின் ஒளி படைத்த மலர்களைச் சிதறியது என்பதை,

'இறுவரை வேங்கை ஒள் வீ சிதறி' (41. 11)

எனும் வரி உணர்த்துகிறது.

## மலைவளம்

அக இலக்கியங்களில் தலைவனைப் புகழ்ந்து கூறுமிடத்து அவன் வாழும் நாட்டின் மலை வளம் சிறப்பிக்கப்படுகிறது. இயற்கையைப் பாடும் இலக்கியங்கள் முதலில் சுட்டுவது மலைவளமே. குறிஞ்சி நில தெய்வமான முருகன் மலைப்பகுதியில் வாழும் கடவுளாகவே இலக்கியங்களில் சுட்டிக் காட்டபபட்டுள்ளன.

மலைப்பகுதிகளில் அருவி நீர், பல வகையான பூக்கள், தேன் கூடுகள், தினைக்கதிர்கள் ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. புலிகளின் இருப்பிடமாகவும் உள்ளது. மலைப்பகுதிகளில் விளைவிப்பதற்கு ஆட்கள் இன்றி மூங்கிலின் நெற்கதிர்கள் தானே வளர்ந்து நின்றன எனும் செய்தியை,

"வாங்குகோல் நெல்லொடு வாங்கி வருவைகல்
மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி" (50. 1-2)

எனும் வரிகள் உணர்த்துகின்றன. இந்நெற்கதிர்களை கரிய பெண் யானை உணவாக உட்கொண்டது.

மலைப்பகுதிகளில் மிளகுச் செடிகள் வளர்ந்துள்ள செய்தியை,

'கறிவளர் சிலம்பில் (52.17)

எனும் தொடர் உணர்த்துகிறது. கொல்லி மலையில் சிறந்த பாவையைச் செய்யக் கூடிய கலை வல்லான் வாழ்ந்த செய்தியை,

'வல்லவன் தைஇய பாவை'

எனும் வரி உணர்த்துகிறது.

## அருவி

மலைப்பகுதிகளில் விழும் அருவியின் அழகு இலக்கியங்களில் எழில்சோர புனையப்பட்டுள்ளது. மலை நாட்டிற்கு உரிய தலைவனைப் புகழுமிடத்தும் அருவியின்; சிறப்பு போற்றப்படுகிறது. மழை பெய்ததால் சிறந்து விளங்கும் அருவியின் நலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை,

'வானின் இலங்கும் அருவித்தே' (41.19)

எனும் வரி உணர்த்துகிறது.

அருவியில் தெய்வ மகளிர் நீராடிய செய்தியை கலித்தொகை கூறுகிறது. மலைப்பகுதிகளில் பந்தடித்து விளையாடிய தெய்வ மகளிர் தங்களின் களைப்பு நீங்க தண்ணிய தாழ்ந்த அருவியில் நீராடுகின்றனர். இதனை,

"விண்தோய் வரை, பந்து எறிந்து அயா வீட
தண் தாழ் அருவி, அரமகளிர், ஆடுபவே" (40.22-23)

எனும் வரிகள் உணர்த்துகின்றன. இதே கருத்தினை,

'அருவி நுகரும் வானர மகளிர்' (மலைபடுகடாம்.294)

என மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது.

மழை பெய்ததன் காரணமாக பள்ளமான பகுதிகளில் நீர் நிறைந்து அருவிகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. இதனை,

"அயம் நந்தி அணிபெற, அருவி ஆர்த்து இழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல் வெற்ப!" (53.6-7)

எனும் வரி உணர்த்துகிறது.

'இன்நுரைச் செதும்பு அரற்றும் செவ்விபுன்' (48.18)

எனும் வரியில் இனிய நுரைகளோடு கூடிச் சிறிதாக வருகின்ற அருவி நீர் ஒலி செய்யும் இளவேனில் பருவம் என்று சிறப்பிக்கப்படுகிறது.

**மழைவளம்**

மக்கள் வாழ்வின் முக்கிய ஆதாரமாக விளங்குவதே மழைதான். நீரின்றி அமையாது உலகு என்று கூறுவர். மழைவளம் ஒரு நாட்டில் சிறப்புற்று இருந்தால் மக்கள் எக்குறையுமின்றி வாழ்வர். இலக்கியங்களில் புலவர்கள் மழையின் சிறப்புகளை பல இடங்களில் எடுத்துக் கூறியுள்ளனர். குறிஞ்சிக்கலி இரவுப்பொழுதின் மழை வரவைக் கூறுமிடத்து,

'இடி உமிழ்பு இரங்கி விரவு பெயல் நடுநாள்' (41.5)

எனும் வரியில்நடு இரவில் இடி இடித்து நெருப்பை உமிழ்ந்து எவ்விடத்தும் சென்று கலக்கும் மழை என வருணிக்கிறது.

மழை நாட்டுத்தலைவனை விளித்துக் கூறுமிடத்து,

'பயமழை தலைஇய பாடுசால் விறல் வெற்ப' (57.7)

எனும் வரியில் பயன் தரும் மழையைத் தன்னிடத்தே கொண்ட பெருமையையும் வெற்றியையும் உடைய வெற்பன் என்று குறிஞ்சிக்கலி கூறுகிறது.

மழையின் சிறப்பை பாண்டிய மன்னனுடன் ஒப்புமைப்படுத்தி புலவர்கள் பாடியுள்ளனர்.

'பொழிபெயல் வண்மையான்' (57)

எனும் வரி பொழிகின்ற மழை போலும் கொடைத்தன்மை மிக்கவன் பாண்டியன் என்ய கருத்தை எடுத்துரைக்கிறது. சிறுபானாற்றுப்படை நூலில் நத்தத்தனார்,

'----- ------ பெயல் மழைத் தடக்கை' (சிறுபானாற்றுப்படை.124)

ஏன நல்லியக்கோடனைப் புகழ்ந்துரைக்கிறான்.

**பூக்கள்**

பூக்கள் அழகியல் தன்மை நிறைந்தது. தமிழ் இலக்கியங்கள் பூக்களின் சிறப்பைப் பாட மறந்ததில்லை. தலைவியின் அழகை பூக்களோடு ஒப்பிட்டுப் புலவர்கள் பாடியுள்ளனர். குறிஞ்சிப்பாட்டு 99 வகையான மலர்களைப் மகளிர் பறித்து பாறைகளில் வைத்து விளையாடிய செய்தியைக் கூறுகிறது. கலித்தொகையிலும் பல பூக்களின் அழகு புலவர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது.

கொடிப்பூ, கோட்டுப்பூ இரண்டும் நீர் வளம் இன்றியே அழகாகப் பூத்திருந்தன என்பதை,

'கொடியும் கோட்டவும் நீர் இன்றி நிறம் பெற' (54)

எனும் பாடல் வரி உணர்த்துகிறது.

தலைவன் தலைவியின் அழகைப் புகழ்ந்து கூறுமிடத்து பூக்களோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். தலைவியின் கண்களை நீலமலருக்கு இணையாகக் கூறுகிறான். இதனை,

'தேம்பாய அவிழ் நீலத்து அலர்சென்ற அமர் உண்கண்' (57.8)

எனும் வரியில் தேன் பாய்ந்து இதழ் விரிக்கும் நீலமலர் என்றும் அம்மலர் போன்ற மையுண்ட கண்களை உடையவள் தலைவி என்றும் ஒப்புமைபடுத்தி தலைவன் கூறுகிறான்.

மற்றொரு பாடலில் தலைவியின் வளையலை தாமரை மலருடனும் விரல்களை காந்தள் மலருடனும் ஒப்பிட்டுப் புகழ்கிறான். இதனை,

'தளைநெகிழ் பிணிநிவந்த பாசடைத் தாமரை
முகை நிரைத்தவை போலும் முத்துக்கோல் அவிர்தொடி
அடுக்கம் நாறு அலர் காந்தள் -------------' (59.1-3)

எனும் வரிகள் மூலம் அறியலாம்.

முருக்கு அவிழ்த்த நீருக்கு மேல் ஓங்கி வளர்ந்த பசுமையான இலை சூழ்ந்த தாமரை மொட்டுகள் போன்று வடிவமைக்கப்பட்ட முத்தினை அழுத்தி செய்த தொடியையும், பக்க மலைச்சாரல்களில் மணம் வீசும் காந்தள் மலர் போன்ற விரல்களையும் உடையவளே என தலைவியைத் தலைவன் வருணிக்கிறான். குறுந்தொகையிலும்,

'சிலம்புடன் கமழும் அலங்குலைக் காந்தள்' (குறுந்தொகை.239)

எனும் வரியில்; இதே கருத்தைப் புலவர்கள் பதிவு செய்துள்ளனர்.

### தலைவியின் அழகைப் புகழ்தல்

கலித்தொகையில் தலைவன் தலைவியின் அழகைப் புகழ்ந்து கூறுமிடத்து இயற்கையோடு ஒப்பிட்டுப் புகழ்கிறான். கை, கால், முகம், கண், நுதல்,இடை,கூந்தல் என தலைவியின் பல உறுப்புகளை இயற்கையோடு ஒப்பிடுகிறான்.

**"அணிமுகம் மதி ஏய்ப்ப, அம்மதியை நனி ஏய்க்கும்,**
**மதிமுகம், மாமழைநின்பின், ஒப்ப பின்னின்கண்**
**விரிநுண் நூல் சுற்றிய ஈர்இதழ் அலரி**
**அரவுக்கண் அணி உறழ் ஆரல் மீன்தகை ஒப்ப"** (64.1-4)

நினது அழகிய முகம் மதியை ஒத்துள்ளது. மணிகள் விளங்கும் உன் பின்னிய கூந்தல் முகத்திற்கு ஒப்பாகிய மழையை ஒத்திருந்தது. கூந்தலில் நீ சூடியுள்ள பூவோ,நுண்ணிய நூலால் கட்டப்பட்டு தேனால் ஈரமான இதழைக் கொண்டிருந்தது. கரிய பாம்பினிடத்தே கிடந்து அதன் கரிய நிறத்தோடு மாறுபட்ட ஆரல் மீனின் அழகைப் போன்று பின்னிய கூந்தலில் கட்டிய பூ திகழ்ந்தது என்று கூறுகிறான். மேலும்,

**'சுரும்பு இமிர் பூங்கோதை அம் நல்லாய்'** (64.11)

எனும் வரியில் வண்டுகள் ஒலிக்கும் பூவால் செய்த பூங்கோதையுடன் விளங்கும் அழகினை உடையவளே என்றும்,

**"துகள் அறு வாள் முகம் ஒப்ப மலர்ந்த**
**குவளையும் -------------- ------- இகலி**
**முகைமாறு கொள்ளும் எயிற்றாய்"** (15-17)

எனும் வரிகளில் மாசற்ற ஒளியுடைய முகத்திற்கு ஒப்பாகச் சிவப்பாகிக் குவளை மலர் போன்ற நீல விழிகள், முல்லை மொட்டோடு மாறுபாடு கொண்ட பற்களை உடையவள் என புகழ்ந்து கூறுகிறான்.

### முடிவுரை

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறத. புலவர்கள் மக்கள் வாழ்க்கையைக் கூறுமித்து இயற்கையோடு தொடர்புபடுத்தி பாடல் புனைந்துள்ளனர். மழைவளம் மன்னனின் வள்ளண்மைக்கு ஒப்பாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மலைவளமும் அதில் தோன்றும் அருவி நீரும் அழகாகப் புனையப்பட்டுள்ளது. அருவியில் நீராடும் மங்கையரின் அழகு புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. மகளிர் அழகோடு பூக்களிக் தன்மை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. தலைவன் தலைவியைப் புகழுமிடத்து இயற்கையோடு இணைத்து உவமித்துப் புகழ்கிறான். இவ்வாறு பல இறய்கைப் புனைவுகள் நிறைந்ததாக கலித்தொகையின் குறிஞ்சிக்கலி அமைகிறது.

### தொகுப்புரை

குறிஞ்சி நில மக்களின் கருப்பொருள்களில் ஒன்றான வேங்கை மரம் குறிஞ்சிக்கலியில் தலைவன் தலைவி வாழ்க்கை நிகழ்வுகளில் உவமையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மலை நாடனை விளித்துக் கூறுமிடத்து வேங்கை மரத்தை புலிக்கு உவமையாக ஒப்பிட்டுப் புலவர்கள் கூறியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மலைப்பகுதிகளில் அருவி நீர், பல வகையான பூக்கள், தேன் கூடுகள், தினைக்கதிர்கள் ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. புலிகளின் இருப்பிடமாகவும் உள்ளது. மலைப்பகுதிகளில் விளைவிப்பதற்கு ஆட்கள் இன்றி மூங்கிலின் நெற்கதிர்கள் தானே வளர்ந்து நின்றன எனும் செய்தியை குறிஞ்சிக்கலி பதிவு செய்கிறது.

அருவியில் தெய்வ மகளிர் நீராடிய செய்தியையும் மலைப்பகுதிகளில் பந்தடித்து விளையாடிய தெய்வ மகளிர் தங்களின் களைப்பு நீங்க தண்ணிய தாழ்ந்த அருவியில் நீராடினர் என்ற செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிஞ்சிக்கலி இரவுப் பொழுதின் மழை வரவைக் கூறுமிடத்து,நடு இரவில் இடி இடித்து நெருப்பை உமிழ்ந்து எவ்விடத்தும் சென்று கலக்கும் மழை என வருணிக்கப்படுகிறது. மழையின் சிறப்பை பாண்டிய மன்னனுடன் ஒப்புமைப்படுத்தி புலவர்கள் பாடியுள்ளனர்.

தலைவன் தலைவியின் அழகைப் பூக்களோடு ஒப்பிட்டுக் கூறுகிறான். தலைவியின் கண்களை நீலமலருக்கு இணையாகக் கூறுகிறான். தலைவியின் வளையலை தாமரை மலருடனும் விரல்களை காந்தள் மலருடனும் ஒப்பிட்டுப் புகழ்கிறான்.

## பார்வைநூல்கள்


1. கலித்தொகை - முனைவர்அ.விசுவநாதன்(உ..ஆ), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2014
2. ஐங்குறுநூறு 2 - முனைவர்அ.தட்சிணாமூர்த்தி(உ..ஆ), ப.எண்.867 நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2014
3. பத்துப்பாட்டு 1 - முனைவர்.இரா.மோகன்(உ..ஆ), ப.எண்.141, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2014
4. பத்துப்பாட்டு 2 - முனைவர்.இரா.மோகன்(உ..ஆ), ப.எண்.375, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2014
5. குறுந்தொகை - புலியூர்க்கேசிகன்(உ..ஆ), ப.எண்.240, மணிவாசகர் நூலகம், சென்னை, முதற்பதிப்பு, 2009.